# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க,*
## தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம்

---

*(2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2021, ஒற்றோபர் மாதம் 15 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 15.00*** ***தபாற் செலவு : ரூபா 15.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க,**
**தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம்**

[*2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.- ஓ. 26/2018*

**1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலா மென்பதுடன் 2022, பெப்புருவரி 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, ''யூன் முதலாம் நாளாகும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பெப்புருவரி முதலாம் நாளாகும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

(அ) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''யூன் முதலாம் நாளாகும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பெப்புருவரி முதலாம் நாளாகும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அதன் (2) ஆம் உட்பிரிவில், ''யூன் முதலாம் நாளில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பெப்புருவரி முதலாம் நாளில்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(இ) அதன் (3) ஆம் உட்பிரிவில், ''யூன் முதலாம் நாளில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பெப்புருவரி முதலாம் நாளில்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், ''யூன் முதலாம் நாளன்றோ'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பெப்புருவரி முதலாம் நாளன்றோ'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "சனவரி முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "செத்தெம்பர் முப்பதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"வெவ்வேறு தகைமை யளிக்கும் தேதிகளும் குறைநிரப்பு நிரல்களும்*

20அ. (1) மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்.-

(அ) ஏதேனுமாண்டில் பெப்புருவரி முதலாம் நாளன்று தொடங்குகின்றதும் அவ்வாண்டின் மே முப்பத்தோராம் நாளன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியினுள்ளான;

(ஆ) ஏதேனுமாண்டில் யூன் முதலாம் நாளன்று தொடங்குகின்றதும் அவ்வாண்டின் செத்தெம்பர் முப்பதாம் நாளன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியினுள்ளான; அத்துடன்

(இ) ஏதேனுமாண்டில் ஒற்றோபர் முதலாம் நாளன்று தொடங்குகின்றதும் அடுத்துப் பின்வருமாண்டின் சனவரி முப்பத்தோராம் நாளன்று முடிவடைகின்றதுமான காலப் பகுதியினுள்ளான;

ஏதேனும் நாளன்று பதினெட்டு வயதை எய்துகின்றவரான எவரேனுமாள் இடாப் பொன்றில் தேருநரொருவராக அவரது பெயர் பதியப்படுவதற்கு அல்லது வைத்திருக்கப் படுவதற்கு தகைமையுடையவராதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தேருநரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கு தகைமையுள்ள ஆளொவ்வொருவரும், 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி

அத்தகைய ஆளின் தகைமைபெற்ற முகவரி எந்தத் தேர்தல் மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்தத் தேர்தல் மாவட்டத்தின் பதிவுசெய்யும் அலுவலருக்குத் தேருநரொருவராகப் பதிவு செய்யப்படுவதற்காக விண்ணப்பிக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தேருநரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்குத் தகைமைபெற்ற ஆள் ஒவ்வொருவரும், பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து, 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய ஆளின் தகைமைபெற்ற முகவரி எந்தத் தேர்தல் மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்தத் தேர்தல் மாவட்டத்தின் பதிவுசெய்யும் அலுவலருக்கு அத்தகைய விண்ணப்பத்தைச் செய்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆளின் பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றுடன்; அல்லது

(ஆ) அத்தகைய ஆளின் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றுடன்.

(4) தேர்தல் மாவட்டமொன்றின் ஒவ்வொரு பதிவுசெய்யும் அலுவலரும் முறையே பின்வருவோர் பற்றிய குறைநிரப்பு நிரல்களைத் தயாரித்தல் வேண்டும்:-

(அ) அவ்வாண்டின் பெப்புருவரி முதலாம் நாளுக்கும் அவ்வாண்டின் மே முப்பத்தோராம் நாளுக்கும் இடையே பதினெட்டு வயதை எய்தியுள்ளவர்களும், பதிவுசெய்யப்படுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களுமான எல்லா ஆட்களும்;

(ஆ) அவ்வாண்டின் யூன் முதலாம் நாளுக்கும் அவ்வாண்டின் செத்தெம்பர் முப்பதாம் நாளுக்கும் இடையே பதினெட்டு வயதை எய்தியுள்ளவர்களும், பதிவுசெய்யப்படுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களுமான எல்லா ஆட்களும்; அத்துடன்

(இ) ஆண்டொன்றின் ஒற்றோபர் முதலாம் நாளுக்கும் அடுத்துப் பின்வரும் ஆண்டின் சனவரி முப்பத்தோராம் நாளுக்கும் இடையே பதினெட்டு வயதை எய்தியுள்ளவர்களும், பதிவுசெய்யப்படுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களுமான எல்லா ஆட்களும்.

(5) ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவுசெய்யும் அலுவலர் ஒவ்வொருவரும், (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட முறையான குறைநிரப்பு நிரல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவென்றும், அத்தகைய குறைநிரப்பு நிரல்கள் அல்லது அவற்றின் பிரதிகள், அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறாகத் தேர்தல் மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யும் அலுவலரின் அலுவலகத்தில் அல்லது அத்தகைய வேறு இடங்களில் நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் பார்வைக்குக் கிடைக்கக்கூடியனவாக உள்ளனவென்றும் இரு வாரங்களைக் கொண்ட காலப்பகுதியினுள் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும் வர்த்தமானியிலும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான குறைந்தபட்சம் ஒரு செய்தித் தாளிலேனும் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு நிரலில் அவரது பெயர் உள்ளடக்கப்படுவதற்கு உரிமைகொண்டுள்ளாரென உரிமைகோருகின்ற ஆளொவ்வொருவரும், அவரது பெயர் அந்நிரலில் உள்ளடக்கப்படுவதற்கு தேர்தல் மாவட்டத்தின் பதிவுசெய்யும் அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும், அத்தகைய குறைநிரப்பு நிரல் தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டதிலிருந்து பத்து நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் செய்யப்படுதல் வேண்டும்.

*(7) பதிவுசெய்யப்பட்ட தேருநரொருவர், இப்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்டவொரு குறைநிரப்பு நிரலொன்றில் எவரேனுமாளின் பெயர் உள்ளடக்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஒவ்வோர் ஆட்சேபனையும், அத்தகைய குறைநிரப்பு நிரல் தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டதிலிருந்து பத்து நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் தேர்தல் மாவட்டத்தின் பதிவுசெய்யும் அலுவலருக்கு எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும்.*

*(8) உரிமைக் கோரிக்கைகளையும் ஆட்சேபனை களையும் தீர்மானித்தல் தொடர்பாக இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழான எவையேனும் உரிமைக் கோரிக்கைகளுக்கும் ஆட்சேபனைகளுக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.*

*(9) ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவுசெய்யும் அலுவலர், உரிமைக்கோரிக்கைகளும் ஆட்சேபனைகளும் பற்றி தீர்ப்பளிக்கப்பட்டுள்ள பின்னர் உடனடியாக இப்பிரிவின்கீழ் அவரினால் தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு நிரல்களை சான்றுபடுத்துதல் வேண்டும். அத்தகைய சான்றுபடுத்துகையின்மீது குறைநிரப்பு நிரல்கள், சான்றுபடுத்தப்பட்ட குறைநிரப்பு இடாப்பென அறியப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர்களின் இடாப்பிற்கான இணைப்பொன்றாக இணைக்கப்படுதலும் வேண்டும்.*

*(10) பிரிவு 20அ வின் (9) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் குறைநிரப்பு இடாப்பின் சான்றுபடுத்துகையின்மீது, பதிவுசெய்யும் அலுவலர், இடாப்பானது சான்றுபடுத்தப்பட்டுள்ளதென வர்த்தமானியிலும் மற்றும் தேசிய மொழிகளுள் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது ஒரு செய்தித்தாளிலேனும் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்*

*(11) ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான சான்றுபடுத்தபட்ட குறைநிரப்பு இடாப்பானது (10) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டுமென்பதுடன் 15 ஆம்*

*பிரிவின் (4) ஆம் உட்பிரிவிற்கு அல்லது 18 ஆம் பிரிவிற்கு இணங்க அதன்கண் அடுத்துப்பின்னர் செய்யப்படக்கூடியவாறான அத்தகைய மாற்றங்கள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கமைய, அத்தகைய சான்றுபடுத்தப்பட்ட குறைநிரப்பு இடாப்பு, அடுத்த சான்றுபடுத்தப்பட்ட இடாப்பு நடைமுறைக்குவரு வதன்மூலம் தள்ளிவைக்கப்படும்வரை தொடர்ந்து நடைமுறையிலிருத்தலும் வேண்டும்.*

*24 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**7**. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-*

*"பணிப்புக்களை வழங்குவதற்கு தேர்தல் ஆணைக் குழுவுக்குள்ள தத்துவம்*

*24அ. எவையேனும் சிரமங்கள் அல்லது எதிர் பாராத சூழ்நிலைகளுக்காக எற்பாடுசெய்வதற்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் தேருநர்களைப் பதிவு செய்தல் தொடர்பான ஏதேனும் கேள்வியை அல்லது கருமத்தைத் தீர்மானிப்பதற்காக அல்லது சீராக்கு வதற்காக தேர்தல் ஆணைக்குழு அவசியமானவை யென அது கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்கலாம்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**8**. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, "தேருநர்களின் இடாப்பு" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர்களின் இடாப்பு என்று பொருளாகும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்காக 20அ என்னும் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்ட குறைநிரப்பு இடாப்பு உட்பட, ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர்களின் இடாப்பு என்று பொருளாகும்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.*

*முதன்மைச் சட்டவாக்கத் துக்கான அட்டவணையைத் திருத்துதல்*

**9**. *முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-*

*(1) அட்டவணையின் படிவம் அ வின் (2), (3) மற்றும் 5 (ii) என்னும் விடயங்களில் "19 ..... யூன் 1 ஆந் தேதியன்று"*

என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "20..... பெப்புருவரி 1 ஆந் தேதியன்று" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

(2) அட்டவணையின் படிவம் ஆ வின் (2), (3) மற்றும் 5 (ii) என்னும் உட்பிரிவுகளில், "19..... யூன் 1 ஆந் தேதியன்று" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "20..... பெப்புருவரி 1 ஆந் தேதியன்று" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியொன்றுக்கான குறைநிரப்பு நிரல்

**10.** (1) மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், 2021, யூன் 1 ஆந் தேதியிலிருந்து இச்சட்டம் தொடங்கும் தேதி வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் தேதியில் பதினெட்டு வயதை எய்தியுள்ள எவரேனும் ஆள் தேருநரொருவராக தேருநர் இடாப்பில் அத்தகைய ஆளின் பெயரைப் பதிந்துகொள்வதற்கு அல்லது தொடர்ந்துவைத்திருப்பதற்கு தகைமையுடையவராதல் வேண்டும் அத்துடன் அத்தகைய ஒவ்வொரு ஆளும் எந்த தேர்தல் மாவட்டத்தில் 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய ஆளின் தகைமையளிக்கும் முகவரி அமைந்துள்ளதோ அந்த தேர்தல் மாவட்டத்தின் பதிவுசெய்யும் அலுவலருக்கு 20அ என்னும் பிரிவின் (3) ஆம் உ்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து பதிவுக்கென விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) பதிவுசெய்யும் அலுவலர் ஒவ்வொருவரும் (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்கென குறைநிரப்பு நிரலொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், குறைநிரப்பு நிரலின் தயாரிப்புக்கு 20அ என்னும் பிரிவின் (5) தொடக்கம் (11) ஆம் வரையிலான உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்படும் நடவடிக்கை முறைகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையவாதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*